## மெட்ரோ ரெயில் சார்பில்

# லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

சென்னை, நவ.2–
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் 'லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம்' கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கொளத்தூரில் உள்ள துர்கா தேவி சவுத்ரி விவேகானந்தா வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் 'நேர்மை–ஒரு வாழ்க்கை முறை' என்ற தலைப்பில் வினாடி–வினா போட்டி மற்றும் விவாதம் நடந்தது.

இந்த போட்டியில் 100–க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

ஊழல் மற்றும் அதன் வெளிப்படைத்தன்மைக்கு எதிராகவும், பொது வாழ்க்கையில் நேர்மையாக இருப்பதை ஊக்குவிக்கவும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மேலும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்படும் என சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.